உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தோத்திரப்
பிரபந்தத்திரட்டு

இவை

அஷ்டாவதானம்

வீராசாமிசெட்டியாரவர்கள்

மருகராகிய

சூ. அப்பன் செட்டியாரவர்கள்

மாணாக்கரிலொருவரால்

பார்வையிட்டு,

அ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்

பூமகள்மிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1936

645
507
449

கணபதிதுணை

சிதம்பரசுவாமிகளியற்றிய

மதுரை மீனுட்சியம்மை கலிவெண்பா

வரலாறு

இத்தமிழ்நாட்டிலே பரமசிவம் அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளிய மதுரைமாநகரத்திலிருந்து, விருத்தாசலத்தில் ஒரு பிரபு வீட்டிற்கு வந்து சிதம்பரதேவர் கல்விகற்பிக்கும் பொழுது, குமாரதேவர் அவரைத் தடுத்தாண்டு உபதேசித்தபடி சகசானுபூதியில் நிற்கும்போது அம்மை மயிலாக வந்து மறைக்கக் கண்டு, அவர் தமது ஞானசாரியராகிய குமாரதேவருக்குத் தெரிவிக்க, ஆசாரியர் அப்பா! உனக்கு உபாசனமூர்த்தம் யாவரென்று கேட்க

சுவாமீ! அடியேன் மதுரையிலிருக்கும் போது மீனுட்சியம்மையை யுபாசித்துக்கொண்டிருந்தேனென, ஆகையால் நீ அங்கேபோய்த் தெரிந்துக்கொள்ளென்று கட்டளையிட, இவரும் அப்படியேபோய் அம்மையைநாடி அருந்தவஞ் செய்ய, அம்மை எளிதில் வராமையால் அவள் கிருபை பெறும்படி இக் கலிவெண்பாவைப் பாடியருளி அவள் கட்டளையால் திருப்போரூருக்கு எழுந்தருளினர்.

இதனை நித்தியமும் பாராயணஞ் செய்பவர் அஷ்ட ஐஸ்வரியமும் மறுமையில் மோட்ச சாம்பிராச்சியமும் பெறுவார்களென்பது திண்ணம்.

உ

கணபதிதுணை

திருப்போரூர்

சிதம்பரசுவாமிகளியற்றிய

மதுரை

மீனாட்சியம்மை கலிவெண்பா

காப்பு

அங்கையற்கு மாற்கு
மரியபெரு மானிடஞ்சேர்
அங்கையற்கண் ணம்மைக்
கணியவே-அங்கயத்தின்
மாமுகங்கொள் கோமானை
வாழ்த்திக் கலிவெண்பா
நாமுகந்து பாடு
வோ மன்கு.

கலிவெண்பா

சோரும் பூங்கமலத்
தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக்
கருங்குயிலே-ஞாயும்

வேதமுத லாகின்ற
மெய்ப்பொருளே மின்னெளியே
ஆதி பராபரையே
யம்பிகையே-சோதியே
அண்டமெல்லாம் போற்று
மரும்பொருளே யாரணங்கே
எண்டிசைக்குந் தாயான
வில்வரியே-தெண்டிரையில்
வந்தவமுதே யென்று
மாமுலே நினைப்பார்
சிந்தைதனி லேயுறையுஞ்
செல்வியே-அந்தமிலா

மாயோன் றனக்கினிய
மல்லியே மாமயிலோன்
றாயே பராபரையே
சங்கரியே-தூயவொளி

மன்னுங் கயிலாச
மாமயிலே மேருவெனும்

பொன்னங் கிரியுடைய
பூங்கொடியே-அன்னமே
அட்டகுல வெற்பா
யமர்ந்தவளே யாதியந்த
மெட்டெட்டுந் தானு
யிருந்தவளே-மூட்டவெங்கும்
அவ்வெழுத்தாய் நின்ற
வரும்பொருளே யாரணங்கே
உவ்வெழுத்தாய் நின்றதொரு
வுண்மையே-எவ்வெழுத்துந்
தானுகி நின்றதொரு
தற்பரமே யெவ்வுயிர்க்கும்
ஊனுகி நின்றதோ
ருத்தமியே-கோனுய்ப்
படியளக்க மால்பார்
பதினன்கு மொக்க
அடியவரை யீடேற்று
மன்னுய்-முடிவிலா

ஓங்காரத் துட்பொருளே
யுற்றநவ கோணத்தில்
ரீங்காரந் தன்னி
லிருப்பவளே-பாங்கான
மூக்கோணத் துள்ளிருக்கு
மூர்த்தியே மூவிரண்டாஞ்
சட்கோணத் துள்ளிருக்குஞ்
சத்தியே-மிக்கபுக
ழெண்ணிரண்டாங் கோட்டி
லிருப்பவளே யெவ்வுயிர்க்கும்
பண்ணிசைந்த பாட்டின்
பழம்பொருளே-விண்ணுலகின்
மேற்பட்டங் கூடுருவி
மேலாகி-நின்றதொரு
நற்பத்து முக்கோண
நாயகியே-சீர்ப்பெற்ற
பஞ்சகோணத் திருந்த
பைங்கிளியே-பார்முழுதுக்

தஞ்சமது வாகிநின்ற
தையலே-செஞ்சொன்மறைச்
சொல்லே பொருளே
சுவையே யறுசுவையே
யெல்லாப் புவிக்கு
மிறைவியே-தொல்லை
எறும்புகடை யானதலை
யெண்ணி லுயிர்க்கு
முறும்பொருளா யங்கங்
குணர்வாய்ப்-பெறும்பயனை
யாறுறு தத்துவமா
யையிரண்டு வாயுவாய்க்
கூறுய்த் திசைபத்தின்
கூட்டமாய்ப்-பேறுன
அஞ்செழுத்தா யெட்டெழுத்தா
யைம்பத்தோ ரக்கரமாய்ப்
பஞ்சவர்ன மாய்ப்பஞ்ச
தேவதையாய் வஞ்சமற்ற

ஆறுதாரப் பொருளா
யையைந்தா யைம்மூன்றாய்
வீறுன சக்கரத்தின்
மின்னெளியாய்க்-கூறுங்
கருவிகர ணுதிகளாய்க்
கைகலந்து நின்ற
பெரியதொரு மாயைப்
பிரிவா-யுரியதொரு
சோத்திரத்திற் சத்தமாய்த்
தொக்கிற் பரிசமாய்
நேத்திரத்திற் பேருருவாய்
நீக்கமிலா-நாத்தலனின்
மெத்திரத மாய்மூக்கின்
மேவுகந்த மாய்ப்பிறவாய்
மத்தபிர மத்த
வயிரவியாய்ச்-சுத்த
துரியமதாய்ப் பின்னுந்
துரியாதீ தத்தி

னரிய சிலம்பொலியு
மார்ப்பத் தெரிவரிதாய்
நாடுதனிற் சென்றிரந்து
நற்பவுரி கொண்டுதொந்த
மாடுகின்ற பார்ப்பதியே
யம்பிகையே நாடிக்
களங்கமற வேதான்
கரும்புருவந் தன்னிற்
பளிங்கொளியாய் நின்ற
பரமே-வளம்பெறவே
கண்ணிரண்டி னுள்ளே
கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்றருளும்
பூவையே-பண்ணமைந்த
நாசி நுனிமே
னடுவெழுந்த தீபமாய்
ஓசைவிந்து நாதாந்தத்
துட்பொருளாய்-நேசமுடன்

அஞ்சு முகமா
யகண்டபரி பூரணமாய்ப்
பஞ்சபூ தம்மான
பைங்கிளியே-கஞ்சமலர்ப்
பாத மிரண்டாகிப்
பச்சைநிறந் தானுகி
ஆதிமுத லாகிநின்ற
வம்பரமே-தீதிலா
நெற்றிதனிற் கண்ணுகி
நிட்களரூபப் பொருளாய்
உற்றவெளி யாகிநின்ற
வுத்தமியே-பற்றிநின்ற
ஆகாயத் தின்னெளியா
யந்தரத்தின் ரூபமாய்
மேகாதிக் குள்ளே
விளைபொருளாய்-வாகா
மிடை பிங்கலையா
யிரண்டுக்கு மெட்டாத்

கடையுஞ் சுழுமுனையாய்க்
காவாய்-மடலவிழ்ந்த
மூலாதா ரத்தொளியாய்
மும்மண் டலங்கடந்து
மேலாதா ரத்திருந்த
வெண்மதியாய்ப்-பாலூற
லுண்ணுஞ் சிவயோக
வுத்தமியே மெய்த்தவமே
பண்ணுமறை வேதப்
பழம்பொருளே-யெண்ணரிய
மெஞ்ஞான வித்தே
விளக்கொளியே மெய்ச்சுடரே
யஞ்ஞான மேயகற்று
மம்மையே-பைங்நாகம்
பூண்டசிவ ஞரிடத்துப்
பூங்கொடியே பாங்குடனே
தாண்டவமா டப்பவுரி
தாளமொத்தி-ஆண்டியுடன்

ஆடுங்கூத் தாடிச்சி
யம்மனைபந் தாடிச்சி
தேடியுமால் காணுச்
சிவசத்தி-நாடியுனைப்
போற்றுமடி யார்கள்வினை
போக்கியே யஞ்சலென்று
தோற்றுகின்ற வம்மை
குடியிடைச்சி-சாற்றரிய
பச்சை நிறத்தி
பவளக் கொடியிடைச்சி
சச்சைப் பொருமுலைச்சி
கைவளைச்சி-கொச்சை
மலையரையன் பெற்ற
மலைச்சி கலைச்சி
நிலையறி வேதாந்த
நிலைச்சி-யலையாத
வன்ன நடைச்சி
யருமறைச்சி-யாண்டிச்சி

கன்னல் மொழிச்சி
கருணைச்சி-பன்னுதமிழ்
வாய்ச்சி சடைச்சி
வடிவுடைய மங்கைச்சி
பேய்ச்சி யிளமுலைச்சி
பேதைச்சி-காச்சியபால்
வெண்ணெய் மொழிச்சி
வெளிச்சி வெளியிடைச்சி
அண்ணுபுரந் தீயிட்ட
வம்படைச்சி-நண்ணலரும்
கொப்புக் குழைச்சி
குவளை பெருவிழிச்சி
அப்புச் சடைச்சி
சிவாகமச்சி-மெய்ப்பரங்
கருப்புச் சிலைச்சி
யிலைச்சி வலைச்சி
மருப்புத் தனத்தி
மவுனத்தி-பொருப்பிடத்தி

தாமம் புயத்தி
சமர்த்தி தருமத்தி
நாமச் சிவபுரத்தி
நாரணத்தி தேமருவுங்
காரணத்தி பூத
கணத்தி தனபார
வாரணத்தி யட்டதிக்கு
மாரணத்தி-பூரணத்தி
பாத பரிபுரத்தி
பங்கயத்தி செங்கரத்தி
சோதி மணிநிறத்தி
சொப்பனத்தி-பாதிமதி
சூடுகின்ற சொக்கருடன்
றுய்யபுலித் தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்குங்
காரணியே-நாடறியுஞ்
சேணிச்சி நல்ல
சிறுத்தொண்டன் பிள்ளையுத்

தூணிச்சி நஞ்சமுதா
மூணிச்சி-பாணிச்சி
பாசாங்கு சத்தி
பாத்தி பருப்பதத்தி
காசாம்பூ மேனிக்
கனதனத்தி-மாசிலா
அம்பரத்தி யைம்புலத்தி
யானதொரு வேதாந்த
வும்பருக்கு மெட்டாத
வுத்தமத்தி-செம்பொன்வளைச்
செட்டிச்சி வையைதனிற்
சென்றுவெட்டி மண்சுமந்த
ஓட்டச்சி பூதிபணி
யுத்தளத்தி-அட்டதிக்கு
மின்னே விளக்கே
விலையில்லாச் சீவரத்தனப்
பொன்னே நவமணியே
பூங்கிளியே-இன்னமுதே

மாணிக்க வல்லியே
மாமரகத் தப்பணியே
ஆணிக் கனகத்
தரும்பொருளே-மாணுற்ற
சிங்கார வல்லியே
செம்பொற் சிலம்வளைத்த
கங்காளற் கன்பான
கண்மணியே-மங்காத
தெய்வக் குலக்கொழுந்தே
செம்பட் டுடைத்திருவே
ஐவருக்குந் தாயா
யமர்ந்தவளே-மெய்யருக்குச்
சித்தி கொடுக்குஞ்
சிவானந்தி யன்பருக்கு
முத்திகொடுக் குஞ்ஞான
மூர்த்தியே-எத்திசைக்கும்

தாயகமாய்ச் சூழ்தா
வாசங்க மம்விளக்குந்
தூயசுடர் மூன்றுன
சூக்குமமே-வேயீன்ற
நித்திலமே கற்பகமே
நின்மலமே நன்மணியே
சுத்தபரி பூரணியே
சுந்தரியே-அத்தருடன்
வாதாடு மங்கையே
மாமந்த்ர ரூபியே
வேதாந்தி யேகமல
மெல்லியலே-நாதாந்த
மாயேச் சுவரியே
மங்கையே மாமறைக்குந்
தாயாகி நின்ற
சாரஸ்வதியே-காயாய்ப்
பழுத்த பழமாய்ப்
பழுத்தாதந் தாளுய்

முழுத்த பரானந்த
முதலாய்-எழுத்துமுதல்
ஆறுசம யங்களுக்கு
ளவ்வவர்க்கும் வெவ்வேறுய்
வேறு பலரூப
விகற்பமதாய்க்-கூறிதாய்
அங்கங்குந் தாளு
யமர்ந்தவளே யாதியந்தம்
எங்கெங்குந் தாளு
யிருந்தவளே-திங்களுதல்
அஞ்சுகமே தேனே
யணங்கே யமுதமொழிக்
கிஞ்சுகமே பிஞ்சுமதிக்
கிள்ளையே-கொஞ்சுகுயில்
கன்னி திரிசூலி
கபாலி சிவகாமி
பன்னு கௌரி
மகமாயி-பொன்னின்மலர்த்

காளரி சதுரி
சவுந்தரிமுக் கண்ணுடைய
காளி பகவதி
கங்காளி-தூளியாத்
தக்கன் தலையறுத்த
தத்துவத்தி தற்பரத்தி
அக்கினிகை பீர்த்த
வமர்க்களத்தி-மிக்கபுகழ்
வீரசத்தி மேருவினை
வில்லா வளைத்தவொரு
பாசத்தி வேதப்
பராசத்தி-தாரணிகள்
கொண்டகா ரிச்சிக்குங்
குந்தளத்தி மாமதனன்
சண்டை காரிச்சி
சகலத்தி-தண்டமதிச்
செஞ்சடைச்சி கஞ்சுளிச்சி
செம்படத்தி கங்கணத்தி

பஞ்சசத்தி கொக்களத்தி
பைம்பணத்தி-அஞ்சனத்தி
முத்துவடக் கொங்கைச்சி
முல்லை முகிழ்நகைச்சி
பத்தாவர் நெஞ்சகத்தி
பாரிடத்தி சுத்தவெள்ளை
அக்கு வடத்தி
யறம்வளர்த்தி யன்புடைச்சி
செக்கரிளம் பிறைச்சி
செண்பகத்தி-தக்கமணி
ஓலைக் குழைச்சி
யுபதேச குண்டலச்சி
மாலைக் கழுத்தி
மௌனத்தி-ஞாலமெல்லாம்
அக்கரத்தி பொக்கணத்தி
அண்டபகி ரண்டத்தி
முக்கணத்தி நிட்களத்தி
மோட்சத்தி மிக்கபுகழ்

ஏகாக் கரத்தி
யிமயப் பருப்பதத்தி
நாகாதி பூண்டசிங்க
நாதத்தி-வாகான
பத்மா சனத்தி
பரிமளத்தி பாம்பணைத்தி
கற்பாந் தரத்தி
கருநிறத்தி-விற்காம
வேடிச்சி நல்லதொரு
மீனவனுக் கன்றுமுடி.
சூடிச்சி கொக்கிறகு
சூடிச்சி-நாடிச்சீர்
பாதந் தனைத்தேடும்
பங்கயத்தில்-வீற்றிருக்கும்
வேதன் றலையறுத்த
வித்தகத்தி-நீதிபுனை
பாடகத்தி கீதப்ர
பந்தத்தி வெள்ளிமன்று

ளாடகத்தி கூடலுக்கு
ளாதியே-யேடெதிரே

ஏற்றுவித்து முன்சமண
ரெண்ணுயிரர் கழுவில்
வீற்றிருக்க வைத்தமறை
வித்தகியே-நாற்றிசையும்

கொண்டாடப் பெற்றதொரு
கோமளமே யாமளையே
தண்டா மரைத்திருவே
தையலே-மண்டலங்கள்

எங்குமொத்து நின்றருளு
மீஸ்வரியே மாமதுரை
அங்கயற்க ணுயகியே
யும்மையே-துங்க

ஒளியே பெருந்திருவே
யோதிமமே யுண்மை

வெளியே பரப்பிரம
விந்தே-அளிசேரும்

கொந்தள கபந்திக்
குயிலே சிவயோகத்
தைதந்தருவே மூவருக்கு
மன்னையே-எந்தமிட

ரல்லல் வினையெல்லா
மகற்றியே யஞ்சலென்று
நல்லசவு பாக்கியத்தை
நல்கியே-வல்லபத்தி

ஞசுமது ரஞ்சித்ர
வித்தார மென்றறிஞர்
பேசுகின்ற வுண்மைப்
பெருவாக்கு-நேசமுடன்

வந்திருந்து புத்தி
மதிகொடுத்துச்-சந்ததமும்
நீயே துணையாகி
நின்றிரட்சி யங்கயற்கண்
தாயே சரணஞ்
சரண்.

மதுரை மீனாட்சியம்மை
கலிவெண்பா
முற்றிற்று.
